

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், ஆலங்குளம், ஒட்டபிடாரம் மற்றும் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.11.2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியில் உடற்கல்வியியல் துறையில் "Physical Activity for Skill Development Through Machine Learning" என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு "முனைவர் பட்டம்" பெற்றதையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



நீலகிரி மாவட்டம் குந்தா வட்டம் எமரால்ட் அரசு மருத்துவத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஹெல்ப் இன் ஹேண்ட்ஸ் தொண்டு நிறுவனம். மாவட்டத்தில் முதல்முறையாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ மற்றும் தங்கும் மனையினை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ ராசா திறந்து வைத்தார். உடன் அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்ய தண்ணீரு. மாவட்டகாவல் கண்காணிப்பாளர் நிஷா நீலகிரி மாவட்ட கழக செயலாளர் கே.எம். ராஜு, ரவிக்குமார், நாசர் அலி, ஆர்.பி.பரமேஷ் குமார், பரமசிவம் ஜெகதீஷ் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் எக்ஸ்போ செந்தில் ஆகியோர் உள்ளனர்.



இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி., மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையத்திற்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சென்று, நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து ஆய்வு செய்ததுடன், பல்வேறு மாவட்டத்தில் உள்ள கழக பாக முகவர்களிடம் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர் பாகத்தில் நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து கேட்டறிந்தார். அதுபோது, சட்டத்துறை இணைச் செயலாளர்கள் சூர்யா வெற்றிகொண்டான், ஜெ.பச்சையப்பன், சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ், கழக வழக்கறிஞர் பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.

### பன்னிரண்டாம் வகுப்பு மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியது ;

# போதை வஸ்துக்கள் விற்பனையை முதல்வர் இரும்புக் கரம் கொண்டு தடுத்து வருகிறார்!

## மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, நவ.21-

பொன்மலைப்பட்டி பகுதியில் உள்ள புனித வளனார் பெண்கள் மேல் நிலைப்பள்ளி,

புனித சிலுவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன்மலை

திரு இருதய ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன்மலைப்பட்டி

அரசு ஆதி திராவிட நல பெண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்டூர்

அரசு ஆதி திராவிட நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்டூர்

முக்குலத்தோர் மேல்நிலைப்பள்ளி, திருவெறும்பூர்

பாய்லர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கைலாசபுரம்

பாய்லர் பிளாண்ட் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கைலாசபுரம்

அரசு மேல்நிலைப் பள்ளி, அரசங்குடி

குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, துவாக்குடி மலை

அரசு மேல்நிலைப் பள்ளி, துவாக்குடி

அரசு மேல்நிலைப் பள்ளி, தேனேரிப்பட்டி

அரசு மேல்நிலைப் பள்ளி, சோழமாதேவி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

இவ்விழாவில் ஆண்கள் 589 பெண்கள் 1043 மொத்தம் கூடுதல் 1632 ஆகிய மிதிவண்டிகளை பள்ளி



கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பாலாஜி , முதன்மைக்கல்வி அலுவலர் . கோ.கிருஷ்ணப்பிரியா மண்டலகுழுத்தலைவர் மு . மதிவாணன் , மாமன்ற உறுப்பினர்கள் தர்மராஜ், ரமேஷ், நீலமேகம், சிவக்குமார் தாஜுதீன் கழக நிர்வாகிகள் கே.எஸ். எம். கருணாநிதி, காயாம்பு, தங்கவேலு, செல்வராஜ், பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறும் போது..,

பன்னிரண்டாம் வகுப்பு மாணவி கொலை செய்திருக்கும் கூடிய சம்பவம் கண்டிக்கத்தக்கது படிக்க வரும் மாணவிக்கு இது போன்ற நிகழ்வு பெற்றோர்கள் மனநிலைமையில் இருந்து பார்க்கும் போது வேதனையை தருகிறது சொந்த காரணத்திற்காக இந்த கொலை நடந்திருந்தாலும் கூட கண்டிப்பாக கண்டிக்கத்தக்கது.

20 லட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு மிக விரைவாக வழங்கப்படும்

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளில் போதைப்பொருள் இருக்கக் கூடாது என்பதுதான் தமிழக அரசின் நிலைப்பாடு குழந்தைகள் எந்த விதமான போதை பழக்கத்திற்கு அடிமையாகக் கூடாது என மகிழ் முட்டம் என்ற திட்டம் கொண்டு வந்து உள்ளோம். இந்த சம்பவத்தில் இரும்பு கரம் கொண்டு தடுத்துக் கொண்டிருக்கிறார் தமிழக முதலமைச்சர்

TET தேர்வு தொடர்பான ஆலோசனை கூட்டம் நாங்கள் வைத்துள்ளோம் யாரையும் விட்டுவிடாமல் அனைவரையும் உள்ளே கொண்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்கிறோம்.

தமிழகத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறோம் வளர்ச்சியில் இரட்டை இலக்கை வளர்ச்சி அடைந்த மாநிலம் தமிழகம் இதன் காரணமாகத்தான் பெருமையாக சொல்கிறார்கள் ஆனால் அந்த வளர்ச்சியையும் தடுக்கிறார்கள்.

வருவாய்த்துறை அதிகாரிகள் போராட்டம் என்பது தூண்டுதல் கிடையாது.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என என பிரதமர் கூறுவது ஒவ்வொரு முறையும் அவர் கூறிக் கொண்டு தான் இருக்கிறார் ஆனால் மக்கள் கண்காணித்து வாக்களிப்பார்கள் என்றார்.

# சென்னையில் விழிப்புணர்வு பிரச்சாரம்!

சென்னை,நவ.21-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் சுகாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்நிலையில் ஆண்டுதோறும் நவம்பர் 19ஆம் தேதி உலக கழிப்பறை தினமாக அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதி மக்களிடையே சுத்தம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் சிறப்பு அஞ்சல் தலையினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று முன்தினம் (19.11.2025) வெளியிட்டார். 5 ரூபாய்க்கான இந்த அஞ்சல் தலையில் ஆண், பெண், மாற்றுத்திறனாளி, மூன்றாம் பாலினத்தவர் படங்களுடன் Clean Sanitation For All - World Toilet Day 2025 (அனைவருக்குமான சுத்தம் சுகாதாரம் - உலக கழிவறை தினம் 2025) என்கிற வாசகங்களுடன் அமைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கழிவறை வளாகத்தில் கட்டணமில்லா பகுதி என்பதை குறிக்கும் வகையில் No Fee Zone என்கிற வாசகத்துடன் கூடிய விளம்பரப் பலகை, சுகாதாரப் பணியாளர்கள் அணிந்து கொள்ளும் பேட்ஜ் மற்றும் ஸ்டிக்கர்களை மேயர் வெளியிட்டு வழங்கினார்.

மேலும், சுகாதாரப் பணியாளர்களுக்கு சீருடை, கையுறை, முகக்கவசம், தண்ணீர் குடுவை (Stainless Steel Water Bottle) அடங்கிய பாதுகாப்பு உபகரண தொகுப்புகளை வழங்கினார். முன்னதாக, மேயர் அவர்களின் தலைமையில் உலக கழிப்பறை தின உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அறிவுத்திருவிழா....! ஒரு நல்ல Eye Opener!

An Eye Opener.! தோல்விகள் உன்னை சாய்த்து விட முயலும் தருணத்திலும் உன்னால் அடுத்த அடியை எடுத்து வைக்க முடிந்தால் எவராலும் உன்னை தோல்வி அடையச் செய்ய முடியாது. உன் செயல்களை நிறுத்தாதே... இன்னும் வேகத்தோடு செயல்படு. அதிகமாக பேசாதே....! மௌனத்தை விட... உன் வார்த்தைகள் அதிகமாக மதிக்கப்படும் கவனிக்கப்படும் என்றால் மட்டுமே பேசு. வாயால் வடை சுட்டவர்கள் ஏராளம். அந்த வடைகள் விற்பனைக்கு வர முடியாதவை. சந்தைக்கு வராத சரக்கின் முறுக்கு சமுதாயத்துக்கு எப்படித் தெரிய வரும்?

தீயவர்கள் தூயவர்களாக மதிக்கப்படும் இன்றைய காலக்கட்டத்தில் சிஸ்டம் சரியாக இல்லை. ஒன்றிய அரசின் அணுகு முறை, ஏழைகளுக்கு இலவசங்கள், கார்ப்பரேட்டுகளுக்கு சலுகைகள் என்பதே ஆகும். ஆனால் தமிழ்நாடு அரசு சற்று வித்தியாசமான அணுகு முறையை கையாள்வதால் வளர்ச்சிப் பாதையை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. இலவசங்களுக்கு பதிலாக கல்வி தருகிறார்கள். விளையாட்டு மேம்பாடு தரப்படுகிறது. பெண்களுக்கு தொழில் முனைவோர் வாய்ப்புகளும் வங்கிக் கடன்களும் தாராளமாக தரப்படுகின்றன.

பேரறிஞர் அண்ணாவின்..Tap the Rich and Pat the Poor... என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஏழைகளுக்கு உணவு தருவது மட்டுமல்ல இன்றைய தமிழக அரசின் குறிக்கோள். அந்த ஏழை எப்போதுமே ஏழையாக இருந்தால் எப்பதான் அவன் சொந்த காலிலே நிற்பது? ஆகவே ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமிகளுக்கு முன்னேற்றத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது திராவிட மாடல் அரசின் பாராட்டுக்குரிய புதிய பாதை.

அறிவுத் திருவிழா... ஒரு நல்ல Eye Opener.. இந்த அறிவு திருவிழா மூலமாக கிடைக்கப் போகின்ற செல்வத்தை எவராலும் களவாடவோ பறிக்கவோ முடியாது. economic disparity is the root cause for all evils. பணக்காரனை ஏழை ஆக்குவது அல்ல திராவிட மாடல் அரசு. பதிலாக இல்லாதவரே இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதே முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஜீவாதாரக் கொள்கையாகும்.



**வி.சி.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளராக பணியாற்றி வந்த கோவிந்தன் அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்பு உடல் நலம் பாதிக்கப்பட்டு இயற்கை எய்தினார். இதனை அடுத்து தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி அவர்கள் கோவிந்தன் அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் அத்திபுலியூர் பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் பார்வையிட்டார். உடன் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ப. கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கா பழனியப்பன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஜவகர் பாட்ஷா, முன்னாள் மாவட்ட பிரதிநிதி நா.சித்தார்த்தன் ஆகியோர் உள்ளனர்.